உ

ஸ்ரீ தர்பாரண்யேஸ்வரசுவாமி தேவஸ்தானம்

திருநள்ளாறு

எண்:நிஅ(கோ)/ஸ்ரீதசுதே/திரு/2024/ 2

தேதி:04.01.2024

ஏல அறிவிப்பு

இத்திருக்கோவிலிற்கு பாத்தியப்பட்ட கீழ்கண்ட இனம் உரிமம் அனுபவித்துக் கொள்ள விருப்பம் உள்ளவர்கள் கீழ் குறிப்பிட்டுள்ள டேவணித் தொகையை கீழ் குறிப்பிடப்பட்ட விபரப்படி செலுத்தி ஏலம் கேட்கலாம்.

| | |
|---|---|
| ஏலம் விடப்படும் இடம் | தேவஸ்தான அலுவலக வளாகத்தில் அமையப்பெற்றுள்ள நிர்வாக அதிகாரியின் அறை. |
| ஏலம் விடப்படும் நாள் மற்றும் நேரம் | 29.01.2024 - நண்பகல் 12.00 மணி |
| இனம் | திருநள்ளாறு ஸ்ரீ தர்பாரண்யேஸ்வர சுவாமி தேவஸ்தானத்திற்கு சொந்தமான நளதீர்த்தத்தில் படித்துறையில் வைக்கப் பட்டுள்ள "துணிகள் சேகரிப்பு தொட்டியில்" பக்தர்கள் விட்டுச் செல்லும் துணிகள் சேகரம் செய்து கொள்ளும் உரிமம் மற்றும் தீர்த்தத்தை தூய்மையாக பராமரித்தல். |
| காலம் | 01.02.2024 முதல் 31.07.2024 முடிய ஆறு மாத காலம் |
| டேவணித் தொகை | ரூ.1,00,000/- ( ரூபாய் ஒரு லட்சம் மட்டும் ) |

ஏல நிபந்தனைகள்:

1. ஏலத்திற்கான டேவணித்தொகை ரூபாய். 1,00,000/- (ரூபாய் ஒரு லட்சம் மட்டும்) நிர்வாக அதிகாரி (கோயில்கள்) ஸ்ரீ தர்பாரண்யேஸ்வர சுவாமி தேவஸ்தானம் திருநள்ளாறு-என்ற பெயரில் வங்கி கணக்கில் செலுத்தத்தக்க வகையில் வங்கி வரைவோலையாக (Demand Draft) பெறப்பட்டு , 29.01.2024 அன்று காலை 11.00 மணிக்குள் தேவஸ்தான அலுவலகத்தில் செலுத்த வேண்டும்.

2. ஏலம் உறுதி செய்யப்பட்டவர் 29.01.2024 அன்று மாலை 5.45 மணிக்குள் மேற்படி தேவஸ்தான அலுவலகத்தில் ஏலத்தொகை முழுவதையும், நிர்வாக அதிகாரி(கோயில்கள்) ஸ்ரீ தர்பாரண்யேஸ்வர சுவாமி தேவஸ்தானம் ,திருநள்ளாறு என்ற பெயரில் பெறப்பட்ட, வங்கி வரைவோலையை வங்கி கணக்கில் செலுத்தத்தக்க வகையில் தேவஸ்தான அலுவலகத்தில் செலுத்த வேண்டும். தவறும் பட்சத்தில் ஏலம் ரத்து செய்யப்பட்டு மறு ஏலம் உடனே அறிவிக்கப்படும் மற்றும் டேவணித்தொகையையும் மறு ஏலத்தில் பங்கேற்கும் தகுதியையும் இழக்க நேரிடும்.

3. புதுச்சேரி வணிகவரித்துறையினரால் கோரப்படும் சரக்கு மற்றும் சேவை வரி 5% ஏலத்தொகையுடன் சேர்த்து தேவஸ்தானத்தில் செலுத்தப்பட வேண்டும்.

4. மேற்படி ஏலம் மேலே குறிப்பிட்ட நாள் மற்றும் நேரத்தில் தொடங்கி ஏலக்கேள்வி முடியும் வரை நடைபெறும்.

5. ஏலக்கேள்வி ஒவ்வொன்றும் ரூ.1000/- மற்றும் ரூ.1000/-த்தின் மடங்குகளில் இருத்தல் வேண்டும்.

6. ஏலத்தில் பங்குகொள்ள டேவணித்தொகை செலுத்தியவர் மட்டுமே, ஏலத்தில் பங்கேற்க வேண்டும்.

7. ஏலம் நடைபெறும் அறைக்கு அலைபேசி எடுத்துவர அனுமதியில்லை.

8. ஏல நடைமுறை முடியும் வரையில் ஏலம் நடைபெறும் அறையிலிருந்து ஏலதாரர்கள் வெளியில் செல்ல அனுமதியில்லை.

9. டேவணித்தொகையாக செலுத்தும் வங்கி வரைவோலையில் குறிப்பிட்டுள்ள நபர் மட்டுமே ஏலம் கேட்கவோ/ பங்கு கொள்ளவோ அனுமதிக்கப்படுவர்.

10. ஏலத்தில் கலந்து கொள்பவரில் யார் அதிக தொகைக்கு ஏலம் கேட்பவரோ , அவரது ஏலம் நிர்வாகத்தால் ஏற்றுக்கொள்ளும் பட்சத்தில், அந்த நபருக்கு உரிமம் வழங்கப்படும். ஏலத்தொகை ஏற்கபடாதவர்களுக்கு அவரவர் செலுத்திய டேவணித்தொகை (வங்கி வரைவோலையை) திருப்பியளிக்கப்படும்.

11. படித்துறை சுத்தம் செய்யவும் படித்துறையில் வைக்கப்பட்டுள்ள துணிகள் சேகரிக்கும் தொட்டியில் உள்ள துணிகளை சேகரிக்கவும் குறைந்த பட்சம் இரண்டு நபர் திங்கள் முதல் வெள்ளி கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை ஆகிய ஆறு நாட்களுக்கு பணியில் அமர்த்த வேண்டும். சனிக்கிழமைகளில் காலை 6 மணிக்கு குறைந்த பட்சம் 10 ஆட்கள் நியமிக்கப்பட வேண்டும். எந்த நேரமும் குளம் குளக்கரை சுத்தமாக இருக்க வேண்டும்.

12. ஏலதாரரால் நியமிக்கப்படும் நபர்கள் தேவஸ்தானத்தின் பணியாட்களாக கருதப்பட மாட்டார்கள். மேலும், அவர்கள் செய்யும் எவ்வித தவறுகளுக்கு சம்மந்தப்பட்ட நபரும் ஏலதாரரும் மட்டுமே முழு பொறுப்பு ஏற்க வேண்டும்.

13. நளதீர்த்தம் படித்துறைகள் மற்றும் அதனை சார்ந்த நடைபாதைகளை அனைத்து வாரமும் இருமுறை அதாவது திங்கள் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் Bleaching Powder/Soap Oil / பினாயில் / சுண்ணாம்பு கொண்டு தேய்த்து கழுவி சுத்தம் செய்ய வேண்டும் தவறும் பட்சத்தில் ஒரு தடவைக்கு ரூ.2000/- வீதம் காப்பீட்டு தொகையில் பிடித்தம் செய்யப்படும். சுத்தம் செய்த விபரம் மற்றும் கிளிஞ்சள் சுண்ணாம்பு இட்ட விபரம் அடங்கிய பதிவேடு ஏலதாரரால் பராமரிக்கப்பட வேண்டும். தேவஸ்தானத்திலிருந்து ஆய்வுக்கு வரும்போது பதிவேட்டினை காண்பிக்க வேண்டும். எந்தவித பொருட்களும் தேவஸ்தானத்திலிருந்து அளிக்கப்படமாட்டாது. ஏலதாரரே Bleaching Powder/Soap Oil பினாயில், சுண்ணாம்பு போன்றவைகளை ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும். கிளிஞ்சல் சுண்ணாம்பு பிரதி புதன்கிழமை, வெள்ளிகிழமைகளில் தண்ணீரில் போட வேண்டும்.

14. தினந்தோறும் படித்துறைகள் மற்றும் நடைபாதைகளை கூட்டி சுத்தம் செய்வதோடு பக்தர்களால் அவ்வப்போது விட்டு செல்லும் துணிகள்/குப்பைகள் போன்றவைகள் உடனடியாக தீர்த்த வளாகத்தை விட்டு அப்புறப்படுத்த பட வேண்டும். தவறும் பட்சத்தில் நாள் ஒன்றுக்கு ரூ. 1000/- வீதம் காப்பீட்டு தொகையில் பிடித்தம் செய்யப்பட்டு மீதமுள்ள காப்பீட்டு தொகை ஏலதாரருக்கு திரும்ப அளிக்கப்படும்..

15. ஏலம் எடுத்தவர்கள் டேவணித்தொகையாக செலுத்தும் ரூ.1,00,000/- ( ரூபாய் ஒரு லட்சம் மட்டும் ) காப்பீட்டு தொகையாக வைத்துக் கொள்ளப்படும்.

16. ஏலம் உறுதி செய்யப்பட்டபின் 01.02.2024 முதல் 31.07.2024 தேதி வரை நளதீர்த்தத்தின் தூய்மை பராமரிப்பு மற்றும் துணி சேகரிப்பு பணிகள் ஏலதாரர் வசம் ஒப்படைக்கப்படும். ஏலம் எடுத்தபின் சொல்லப்படும் எவ்வித அபிப்பிராயபேதங்களும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. மேற்படி வேலைக்கு தேவையான தளவாட சாமான்கள் ஏலம் எடுத்தவரே தன் சொந்த பொறுப்பில் ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும்.

17. ஏலம் உறுதி செய்யப்பட்ட நபர் ஏலக்காலக்கெடுகளில் பராமரிப்பு பணிகள் குறைகள் ஏற்பட்டு மூன்றுமுறை அபராதம் விதிக்கப்படும் பட்சத்தில் மேற்கண்ட நபருடைய ஏல உரிமை ரத்து செய்யப்பட்டு உடனடியாக மறு ஏலம் நடத்தப்படும். அவ்வாறு மறு ஏலம் நடத்தும் பட்சத்தில் ஏலதாரர் காப்பீட்டு தொகை முழுவதும் இழக்க நேரிடும். மறு ஏலத்தில் ஏலத்தொகையில் தேவஸ்தானத்திற்க்கு இழப்பு ஏற்பட்டால் , அந்த இழப்பு ஏலதாரரின் ஏலத்தொகையில் பிடித்தம் செய்யப்படும். மேலும் மறு ஏலத்தில் அந்த நபர் பங்கு கொள்ள அனுமதி மறுக்கப்படும்.

18. மேற்கண்ட நளதீர்த்தத்தில் தண்ணீர் மட்டம் இருக்க வேண்டிய அளவு/ஆழ்குழாய் கிணறு மோட்டார் இயக்கம் போன்றவைகள் தேவஸ்தான அலுவலரின் மேற்பார்வையில் ஏலதாரரே பராமரிக்கவும், நிலத்தடி நீரை வீணாக்காமல் பார்த்துக் கொள்ளவும் வேண்டும்.

19. நளதீர்த்தத்தில் உள்ள தண்ணீர் சுத்தமாக வைத்திருக்கும் பொருட்டு உபயோகத்திலுள்ள தண்ணீர் அழுக்காகி நீராடுவதற்க்கு தகுதியற்ற நிலை ஏற்படும்போது மட்டும்தான் அந்த நீரை தேவஸ்தானத்தினால் அமைக்கப்பட்டுள்ள இரண்டு மோட்டார் பம்பு செட் கொண்டு ஏலம் எடுத்தவர் தமது சொந்த பொறுப்பில் தேவஸ்தான அலுவலர் மேற்பார்வையுடன் நீரை வெளியேற்றி புதிய நீரை நளதீர்த்தத்தில் நிரப்ப வேண்டும். தண்ணீர் இறைக்க ஆழ்குழாய் கிணற்றை இயக்கியதற்க்கு தனியாக பதிவேடு பராமரிக்கப்பட வேண்டும். பக்தர்கள் நளதீர்த்தம் தண்ணீரில் துணிகள் போடாமல் பார்த்துக்கொள்வதுடன், துணிகளை பிரத்யேகமாக அமைக்கப்பட்டுள்ள துணிகள் சேகரிப்பு தொட்டியில்போட வலியுறுத்துவதும் அதனை ஒப்பந்ததாரர் கண்காணித்து கொள்ள வேண்டும். அதற்கு உதவியாக நிர்வாகத்தினால் பக்தர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்.

20. மேற்கண்ட நளதீர்த்தத்தின் படித்துறையில் அமைக்கப்பட்டுள்ள துணிகள் சேகரிப்பு தொட்டியில் பக்த்ர்களால் விட்டு செல்லும் துணிகளை ஏலம் எடுத்தவரே தன் சொந்த பொறுப்பில் துணிகளை பாதுகாப்பாக அப்புறப்படுத்த வேண்டும். தேவஸ்தான நிர்வாகம் சார்பில் எந்தவித போக்குவரத்து மற்றும் ஆட்கள் கொடுக்கப்பட மாட்டாது. எக்காரணம் கொண்டும் பொதுமக்களுக்கு இடையூறாக துணிகளை சேர்த்து வைப்பதோ அல்லது தீயிட்டு கொளுத்தும் செயல்களையோ செய்யக்கூடாது. மீறினால் ஏலதாரர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு ஏல உரிமம் ரத்து செய்யப்படும். துணிகள் காயவைப்பதற்காக எந்தவித இடங்களும் தேவஸ்தானத்தால் ஏற்பாடு செய்யப்படமாட்டாது.

21. ஏலதாரர் மேற்படி ஏலகாலத்தில் ஏற்படும் எவ்வித இயற்கை இடர்பாடுகள் மற்றும் அரசு அறிவிக்கும் ஊரடங்கு போன்ற நடைமுறையால் ஏற்படும் நஷ்டத்திற்கு தேவஸ்தானம் பொறுப்பேற்காது. எந்த வித இழப்பீட்டு தொகையும் கோரமுடியாது மற்றும் எவ்வித ஏல கால நீட்டிப்பும் வழங்கப்படமாட்டாது.

22. ஏலத்தை நடத்தவும் ரத்து செய்யவும் அதிகபட்ச ஏலத்தொகையை ஏற்கவும், மறுக்கவும் இந்த தேவஸ்தான நிர்வாக அதிகாரி அவர்களுக்கு முழு உரிமையுண்டு. அவரின் தீர்ப்பே இறுதியானது.

Sri Dharbaranyeswara Swamy Devasthanam Thirunallar

நிர்வாக அதிகாரி (கோயில்கள்)